ஸ்ரீ பிலவ வருடம்  பங்குனி  மாதம் 28–ம் தேதி திருவள்ளுவராண்டு 2053 (2022–ம் ஆண்டு ஏப்ரல்  11–ம் தேதி) திங்கள்  கிழமை மாலை 4.00 மணிக்கு   சிறப்புக்   கூட்டம்   நகர்மன்றக் கூடத்தில்   நடைபெற உள்ளது.  மேற்படி,  நகர்மன்ற   கூட்டத்திற்கு   அனைத்து  நகர்மன்ற உறுப்பினர்களும்  தவறாது வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பட்டுக்கோட்டை.
நாள்.. 08 .04. 2022.

நகர்மன்ற தலைவர்,
பட்டுக்கோட்டை நகராட்சி.

**<u>பொருள் எண்..1</u>**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |

| | |
|---|---|
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும், பட்டுக்கோட்டை நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | ரூ.4.00 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | ரூ. 0.10 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | ரூ.5.84 |
| | **மொத்தம்** | ரூ.9.94 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், பட்டுக்கோட்டை நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

பட்டுக்கோட்டை நகராட்சி 1 முதல் 33 வார்டு பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு.

1)600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8 .) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

9) மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு அதன் அருகில் உள்ள தெரு/ சாலைகள்/ சந்து உள்ள மண்டலங்கள்படி நிர்ணயம் செய்யலாம்.

**01.04.2022 முதல் மண்டலங்களில் சொத்துவரி/ காலிமனை வரி தெருக்கள் விபரங்கள்**

| வரிசை எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் விபரம் | ுவரி லம் | ை லம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | நரியம்பாளையம் | C | B |
| 2 | 1 | 1 | காமாட்சி நாயுடு பாளையம் | B | A |
| 3 | 1 | 1 | காத்தாயி அம்மன் கோயில் தெரு | B | A |
| 4 | 2 | 2 | கீழப்பாளையம் | B | A |
| 5 | 3 | 2 | ஆதித்தெரு | C | B |
| 6 | 3 | 2 | வாவுத்தோப்பு | C | B |
| 7 | 4 | 3 | ஆணைவிழுந்தான் குளத்தெரு | B | A |
| 8 | 4 | 3 | மாராட்டியர் தெரு | B | A |
| 9 | 16 | 3 | சௌக்கண்டித்தெரு | A | C |
| 10 | 15 | 3 | வடசேரி ரோடு மன் ார்குடி ரோடு | A | C |
| 11 | 15 | 3 | பிள்ளையார் கோவில் தெரு | A | C |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 15 | 3 | கடைத்தெரு கீழ்பாகம் | A | C |
| 13 | 5 | 4 | தங்கவேல் நகர் 3வது தெரு | B | A |
| 14 | 5 | 4 | தங்கவேல் நகர் 4வது தெரு | B | A |
| 15 | 5 | 4 | தங்கவேல் நகர் 1வது சந்து | B | A |
| 16 | 5 | 4 | தங்கவேல் நகர் 2வது சந்து | B | A |
| 17 | 5 | 4 | தங்கவேல் நகர் 6வது சந்து | B | A |
| 18 | 5 | 4 | தங்கவேல் நகர் 7வது சந்து | B | A |
| 19 | 5 | 4 | தங்கவேல் நகர் 8வது சந்து | B | A |
| 20 | 6 | 4 | தங்கவேல் நகர் 2வது தெரு | B | A |
| 21 | 3 | 4 | தங்கவேல் நகர் 5வது சந்து | B | A |

| வரிசை எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் விபரம் | ு வரி லம் | ை லம் |
|---|---|---|---|---|---|
| 22 | 6 | 5 | தங்கவேல் நகர் 1வது தெரு | B | A |
| 23 | 3 | 5 | தங்கவேல் நகர் 3வது சந்து | B | A |
| 24 | 3 | 5 | தங்கவேல் நகர் 4வது சந்து | B | A |
| 25 | 6 | 5 | பள்ளிவாசல் தெரு பகுதி (1-48 முதல 141-195 வரை) | B | A |
| 26 | 6 | 5 | வடக்கு தெரு | B | A |
| 27 | 7 | 6 | பள்ளிவாசல் தெரு பகுதி (49 முதல 140 வரை) | B | A |
| 28 | 8 | 7 | செட்டித்தெரு | B | A |
| 29 | 8 | 7 | குலால் தெரு | B | A |
| 30 | 8 | 7 | சந்தையப்பன் மேடைத்தெரு | B | A |
| 31 | 9 | 7 | சுப்பிரமணியர் கோவில் தெரு | B | A |
| 32 | 15 | 7 | போஸ்டபீஸ் ரோடு | B | A |
| 33 | 8 | 7 | ராஜபாளையம் தெரு | B | A |
| 34 | 9 | 8 | சுண்ணாம்புக்காரத்தெரு | B | A |
| 35 | 9 | 8 | சுண்ணாம்புக்காரத்தெரு | B | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (தர்மலிங்கம் நகர்,எழில் நகர்) | | |
| 36 | 8 | 8 | மருத்துவத்தெரு | B | A |
| 37 | 10 | 9 | வளவன்புரம் | B | A |
| 38 | 10 | 9 | வளவன்புரம் (மன்னை நகர்) | B | A |
| 39 | 10 | 9 | பாப்பாவெளிபாளையக்கோட்டை | C | B |
| 40 | 11 | 10 | கண்டியன்தெரு (மதுக்கூர் ரோடு கீழ்ப்புறம் முதல் துளசி நகர் வரை) | B | A |

| வரிசை எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் விபரம் | ு வரி லம் | ை லம் |
|---|---|---|---|---|---|
| 41 | 25 | 10 | மயில்பாளையம் தெரு | B | A |
| 42 | 12 | 10 | மயில்பாளையம் தெரு பகுதி | B | A |
| 43 | 11 | 11 | மணியார்புரம் (மணியார்புரம், வாண்டையார்புரம், கணபதி நகர்) | B | A |
| 44 | 11 | 11 | கண்டியன் தெரு (மதுக்கூர் ரோடு மேல்புறம்) | B | A |
| 45 | 12 | 12 | காசாங்குளம் கீழ் கரை சந்து | B | A |
| 46 | 13 | 12 | காசாங்குளம் தென் கரை சந்து | B | A |
| 47 | 13 | 12 | காசாங்குளம் முதல் சந்து | A | C |
| 48 | 13 | 12 | காசாங்குளம் இரண்டாவது சந்து | A | C |
| 49 | 13 | 12 | காசாங்குளம் மேல்கரை | B | A |
| 50 | 12 | 12 | கோ-ஆப்ரேடிங் எக்ஸ்டேசன்,சீ ிவாசபுரம் | B | A |
| 51 | 13 | 12 | ஆக்ரஉறாரம் | A | C |
| 52 | 13 | 12 | அரிசிக்காரத்தெரு | B | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 53 | 24 | 12 | சின்னை யத்தெரு | A | C |
| 54 | 14 | 13 | தலையாரித்தெரு | A | |
| 55 | 14 | 13 | சாமுமுதலித்தெரு | A | |
| 56 | 14 | 13 | பாட்டுநுல்காரத்தெரு | B | A |
| 57 | 20 | 13 | தேரடித்தெரு | A | C |
| 58 | 21 | 14 | தச்சத்தெரு | B | A |
| 59 | 21 | 14 | காளியம்மன் கோவில் தெரு | A | C |
| 60 | 20 | 15 | கடைத்தெரு மேல்பாகம் | B | C |
| 61 | 20 | 15 | துரௌபாதையம்மன் கோவில் தெரு | B | A |

| வரிசை எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் விபரம் | ாத்து வரி ண்டலம் விபரம் | லிமனை வரி ண்டலம் விபரம் |
|---|---|---|---|---|---|
| 62 | 19 | 15 | அறந்தாங்கி ரோடு பகுதி (காந்தி சிலை முதல் அண்ணாசிலை வரை) | A | C |
| 63 | 19 | 16 | அறந்தாங்கி ரோடு பகுதி (மாத கோவில் ஆரம்பம்முதல் காந்தி சிலை வரை) | A | C |
| 64 | 18 | 16 | கோட்டை அல்லா கோவில் தெரு(பாக்கியம் நகர்) | B | A |
| 65 | 18 | 16 | ரெங்கோஜியப்பா தோட்டம் | B | A |
| 66 | 16 | 17 | கோட்டை குளம் மேலமேடு | B | A |
| 67 | 17 | 17 | கோட்டை குளம் கீழமேடு | B | A |
| 68 | 17 | 17 | கோட்டை சிவன் கோயில் தெரு | B | A |
| 69 | 16 | 17 | தஞ்சாவூர் ரோடு (அண்ணாசிலை முதல் கணேச | A | C |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தேவர் மில் வரை) | | |
| 70 | 16 | 17 | தஞ்சாவூர் ரோடு<br>(கணேச தேவர் மில் முதல்<br>ஒழுங்குமுறை விற்பனை க்கூடம்<br>வரை) | B | A |
| 71 | 33 | 18 | மேல ஆதிதிராவிடர் தெரு | C | B |
| 72 | 33 | 18 | வெட்டிக்காடு உடையார் தெரு | C | B |
| 73 | 32 | 19 | பெருமாள் கோவில் தெரு<br>(மெயின் ரோடு) | B | A |

| வரிசை எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் விபரம் | ு வரி லம் | ை லம் |
|---|---|---|---|---|---|
| 74 | 32 | 19 | பெருமாள் கோவில் தெரு (முத்து நகர்) | B | A |
| 75 | 32 | 19 | பெருமாள் கோவில் தெரு (புதுரோடு, செங்குண்டு) | C | B |
| 76 | 31 | 20 | லெட்சத்தோப்பு தெற்கு | C | B |
| 77 | 31 | 20 | லெட்சத்தோப்பு வடக்கு பகுதி (பி.எஸ்.எஸ் நகர்) | C | B |
| 78 | 19 | 21 | நகரம் ரோடு (மெயின் ரோடு மட்டும்) | A | C |
| 79 | 19 | 21 | நகரம் ரோடு (விவேகா ந்த நகர்-1,2,3 முடிபூண்டார் நகர், வ.உ.சி நகர் 1,2, 3, காமராஜ் நகர், வெங்கடாசலம் நகர், எஸ்.இ.டி நகர்) | B | A |
| 80 | 31 | 22 | லெட்சத்தோப்பு வீட்டு வசதி | B | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | குடியிருப்பு முன்பகுதி<br>(அய்யா நகர், அறிவு நகர், கணபதி நகர்) | | |
| 81 | 31 | 22 | லெட்சத்தோப்பு வடக்கு<br>ஆற்றங்கரை கீழப்பகுதி<br>(இரட்டை சாலை மற்றும்<br>லெட்சத்தோப்பு தெற்கு பகுதி) | C | B |
| 82 | 22 | 23 | கொண்டப்பநாய்க்கன் பாளையம் | B | A |
| 83 | 22 | 23 | மாத கோயில் தெரு | B | A |

| வரிசை எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் விபரம் | ு வரி லம் | ை லம் |
|---|---|---|---|---|---|
| 84 | 19 | 23 | அறந்தாங்கி ரோடு (மாத கோயில் முதல் அய்ய ார் கோவில் வரை இருபுறமும்) | A | C |
| 85 | 23 | 24 | மருத்துவமனை ரோடு | B | A |
| 86 | 23 | 24 | அண்ணா நகர் | C | B |
| 87 | 23 | 24 | அண்ணா நகர் (லெட்சுமி நகர்) | C | B |
| 88 | 30 | 24 | பூமல்லியார்குளம் நான்கு கரைகள் | C | B |
| 89 | 29 | 24 | நரிக்குறவர் கால ி,வண்ணான்குளம் கீழ்கரை | C | B |
| 90 | 29 | 24 | பாரதி நகர் | C | B |
| 91 | 30 | 25 | சிவக்கொல்லை பகுதி (ஜெயராஜ் நகர் பகுதி தவிர) | C | B |
| 92 | 29 | 25 | சீ ிவாசன் நகர் | B | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 93 | 29 | 26 | காட்டுநாயக்கன் காலனி | C | B |
| 94 | 29 | 26 | என்.ஜி.ஜி.ஓ.காலனி (ஆர்.வி.நகர்-1,2,3,4 மற்றும் 5 வது தெரு) | B | A |
| 95 | 29 | 26 | நாடியம்மன் கோவில் ரோடு | B | A |
| 96 | 30 | 26 | சிவக்கொல்லை பகுதி (ஜெயராஜ் நகர் மட்டும்) | C | B |
| 97 | 24 | 27 | நாடிமுத்து நகர் | A | C |
| 98 | 24 | 27 | நாடிமுத்து நகர் காலனி | B | A |

| வரிசை எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தெருக்களின் பெயர் விபரம் | து வரி லம் | ை லம் |
|---|---|---|---|---|---|
| 99 | 25 | 27 | முத்துப்பேட்டை ரோடு பகுதி | B | A |
| 100 | 24 | 27 | பழ[illegible]யப்பன் தெரு (போலீஸ் கால[illegible] உட்பட) | A | A |
| 100 | 26 | 28 | அந்தோணியார் கோவில் தெரு | C | B |
| 101 | 26 | 28 | ரயில்வே ஸ்டேசன் ரோடு (பேருந்து நிலையம் முதல் அந்தோணியார் கோவில் தெரு சந்திப்பு வரை) | A | C |
| 102 | 25 | 29 | முத்துப்பேட்டை ரோடு | B | A |
| 103 | 27 | 29 | கரிக்காடு (விஸ்வநாத் நகர்) | B | A |
| 104 | 27 | 29 | கரிக்காடு (வடக்கு வெளி) | B | A |
| 105 | 27 | 30 | கரிக்காடு (காந்தி நகர்) | B | A |
| 106 | 27 | 30 | கரிக்காடு (ஸ்டேட் பாங்க் கால[illegible]) | B | A |
| 107 | 27 | 31 | கரிக்காடு (பாரதி சாலை வடபுறம்) | B | A |
| 108 | 27 | 32 | கரிக்காடு (பாரதி சாலை தென்புறம்) | B | A |
| 109 | 28 | 33 | அண்ணாகுடியிருப்பு | C | B |
| 110 | 28 | 33 | ரயில்வே ஸ்டேசன் ரோடு | B | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (அந்தோணியார் கோவில் தெரு சந்திப்பு முதல் ரயில்வே ஸ்டேசன் ரோடு கீழ்பகுதி வரை) | | |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..1006/2022/அ1) |

**நகர்மன்ற தலைவர்**
**பட்டுக்கோட்டை**

பட்டுக்கோட்டை நகராட்சியில் அரசாணை (நிலை) எண்..52, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்..30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்..40032/2021/ஆர்1, நாள்..01.04.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி. சொத்துவரி / காலிமனை வரிகளை கீழ்க்காணும் மண்டல மதிப்பு விகிதப்படி 01.04.2022 முதல் பொது சீராய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கிறது.

குடியிருப்பு கட்டிடங்கள் (ரூபாயில்)

| கட்டிடத்தின் பரப்பளவு | மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு | உயர்வு செய்யப்படுவதற்கான காரணி | உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பு | மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு | உயர்வு செய்யப்படுவதற்கான காரணி | உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பு | மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு | உயர்வு செய்யப்படுவதற்கான காரணி | உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 600 ச.அ வரை | A | 1.55 | 1.25 | 1.94 | B | 1.05 | 1.25 | 1.31 | C | 0.80 | 1.25 | 1.00 |
| 601 முதல் 1200 ச.அ வரை | A | 1.55 | 1.5 | 2.33 | B | 1.05 | 1.5 | 1.58 | C | 0.80 | 1.5 | 1.20 |
| 1201 ச.அ 1800 ச.அ வரை | A | 1.55 | 1.75 | 2.71 | B | 1.05 | 1.75 | 1.84 | C | 0.80 | 1.75 | 1.40 |
| 1800ச.அ மேல் | A | 1.55 | 2 | 3.10 | B | 1.05 | 2 | 2.10 | C | 0.80 | 2 | 1.60 |

குடியிருப்பில்லாத கட்டிடங்கள் (ரூபாயில்)

| கட்டி டத்தின் பயன்பாடு | மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு | உயர்வு செய்யப்படுவதற்கான காரணி | உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பு | மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு | உயர்வு செய்யப்படுவதற்கான காரணி | உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பு | மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு | உயர்வு செய்யப்படுவதற்கான காரணி | உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வணிக பயன்பாடு | A | 1.55 | 2 | 3.10 | B | 1.05 | 2 | 2.10 | C | 0.80 | 2 | 1.60 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொழிற் சாலை | A | 1.55 | 1.75 | 2.71 | B | 1.05 | 1.75 | 1.84 | C | 0.80 | 1.75 | 1.40 |
| சுயநிதி பள்ளிகள் மற்றும் கல்லுரிகள் கட்டிடங்கள் | A | 1.55 | 1.75 | 2.71 | B | 1.05 | 1.75 | 1.84 | C | 0.80 | 1.75 | 1.40 |

**<u>மண்டலங்கள் வாரியாக காலிமனை வரி சீராய்வு</u>** (ரூபாயில்)

| மண்டலங்கள் | தற்போதைய மண்டல மதிப்பு | உயர்வு செய்யப்படுவதற்கான காரணி | உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பு |
|---|---|---|---|
| A | 0.15 | 100 சதவீதம் | 0.30 |
| B | 0.20 | 100 சதவீதம் | 0.40 |
| C | 0.30 | 100 சதவீதம் | 0.60 |

சொத்துவரி விதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு 2 மடங்கிற்கு மேல் காலிமனை இடம் இருந்தால் சொத்துவரியுடன் சேர்த்து காலிமனை யிட வரிவிதிப்பு செய்யப்பட உள்ளதை மன்றம் அனுமதிக்கிறது.

தற்போதைய வரிவிதிப்பு சதவீதமான து மொத்த ஆண்டு மதிப்பில் 16.25 சதவீதமாக உள்ளது.

ஏற்கனே வே உள்ள சொத்துவரி/ காலிமனை வரியில் ஆண்டு தோறும் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த ஐந்து ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு செய்யப்பட உள்ளதை மன்றம் அனுமதிக்கிறது.

நகர்மன்ற தலைவர்
பட்டுக்கோட்டை நகராட்சி